# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஒபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg

| | |
|---|---|
| **பங்குத்தந்தை:** அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு பால் இயோ *fryeopaul@gmail.com* |
| **உதவிப் பங்குத்தந்தை:** அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | **பங்கு அலுவலகம்:** *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |

| | | |
|---|---|---|
| **28 ஜூலை 2019** | **பொதுக்காலம் 17 ஆம் ஞாயிறு** | **மூன்றாம் ஆண்டு** |




தந்தையே, உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! எங்கள் அன்றாட உணவை நாள்தோறும் எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோர் அனைவரையும் நாங்கள் மன்னிப்பதால் எங்கள் பாவங்களையும் மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும். தீயோனிடமிருந்து எங்களை விடுவித்தருளும். (லூக் 11:2-4)

## உங்கள் சிந்தனைக்கு...

பொதுக்காலம் ஆண்டின் 17 ஆம் ஞாயிறு திருப்பலியில் பங்குக்கொள்ள ஆர்வமுடன் ஆலயம் வந்துள்ள இறைஇயேசுவின் அன்பர்களை அன்புடன் வரவேற்கிறோம். இன்றைய வாசகங்களில் நல்ல ஆசானாம் நம் இயேசு செபிக்கக் கற்றுத்தருகிறார். இறைவேண்டல் என்பது இறை-மனிதத் தொடர்பு சாதனமாகும். செபமே கிறிஸ்துவ வாழ்வின் அடிப்படையும் ஆணிவேருமாகும். இதனைச் சரியாகப் புரிந்துக் கொள்ள இன்றைய வாசகங்கள் நமக்கு உதவுகின்றன. ஆபிரகாமின் இறைவேண்டுதலைக் கேட்ட இறைவன் நல்லவர்களுக்காகத் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவைக்க முன்வருகிறார். நம்மைப்போலப் பழிவாங்கும் உணர்வு இறைவனிடம் இல்லை. தயாளமுள்ள இறைவனிடம் நம் செபங்களுக்கு எதிர்ப்பார்ப்பதைக் காட்டிலும் சிறப்பாக நம்மை நன்மைகளால் நிரப்புகிறார். கிறிஸ்துவின் வழியாக மாந்தர்க்கும் இறைவனுக்கும் இருந்த இடைவெளி நீங்கியது. தந்தை என்று அழைத்துச் செபிக்கக் கற்றுத் தந்த இயேசு நம் வாழ்வில் எது நடந்தாலும் மனநிறைவோடு வாழும் வரம் தான் சிறந்தது என்று உணர்த்துகின்றார். இதையே புனித பவுலடிகளார் நம்மனைவரையும் “இடைவிடாது செபியுங்கள். என்ன நேர்ந்தாலும் நன்றி கூறுங்கள். உங்களுக்காகக் கிறிஸ்து இயேசுவில் கடவுள் வெளிப்படுத்திய திருவுளம் இதுவே!“ என்று அழைக்கின்றார்.

செபிக்கக் கற்றுத் தாருங்கள் என்று தன்னை அணுகிய சீடருக்கு, செபத்தைப்பற்றிய நீண்டதொரு இறையியல் விளக்கத்தை இயேசு சொல்லித் தரவில்லை. மாறாக அவர் சொல்லித் தந்ததெல்லாம் ஒரு செபம், ஒரு கதை, ஒரு நம்பிக்கைக் கூற்று. இந்த செபத்தின் அரிச்சுவடிகளை உணர்ந்தவர்களாக இத்திருப்பலிக் கொண்டாடத்தில் இணைந்து செபிப்போம் நிறைவாழ்வு நம் உள்ளத்தில் இல்லத்தில் நிறைந்திட வரம் வேண்டுவோம்.

## வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னை பெருவிழா 2019



ஆண்டுதோறும் நமது ஆலயத்தில் நடைபெறும் வேளாங்கண்ணி தூய ஆரோக்கிய அன்னையின் ஆண்டுப் பெருவிழா இவ்வருடமும், சிறப்பாக நடைபெறவுள்ளது.

08-09-2018 **ஞாயிறு** மாலை 6:00 மணிக்குப் பெருவிழாத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து அன்னையின் திருவுருவத் தேர்ப்பவனியும் நடைபெறும்.

**அனைவரும் வருக! வேளாங்கண்ணி அன்னையின் ஆசீர் பெறுக!!**

**இவ்வார நவநாளைச் சிறப்பிப்போர்** : தூய அந்தோணியார் ஆலயம், வூட்லாண்ட்ஸ் மற்றும் உயிர்த்த ஆண்டவர் ஆலயம், தோ பா யோ

**அடுத்தவார நவநாளைச் சிறப்பிப்போர்** : கிறிஸ்து அரசர் ஆலயம், அங் மோ கியோ

வேளாங்கண்ணி புனித ஆரோக்கிய அன்னையின் பெருவிழாவைச் சிறப்பாகக் கொண்டாட, தாராள உள்ளத்தோடு நன்கொடை கொடுத்து உதவும்படி உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.

## ஆலயப் புதுப்பிக்கும் பணிக்கான நிதி சேகரிப்பு



அன்பார்ந்தவர்களே! நமது தூய லூர்து அன்னை ஆலயப் புதுப்பிக்கும் பணிகள், வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்காக உங்கள் நன்கொடைகளை காசோலை மூலமாக “Church of Our Lady of Lourdes” என்ற பெயருக்கு வழங்கலாம். காசோலையின் பின்புறத்தில் “Building Fund” என்று குறிப்பிடவும். தாராள மனதுடன் உங்கள் நன்கொடைகளை அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## தமிழ் மறைக்கல்வி வகுப்புக்கள்




ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை காலைத் தமிழ் திருப்பலி முடிந்ததும், நமது ஆலயத்தில் தமிழில் மறைக்கல்வி வகுப்புக்கள் நடைபெறுகின்றன. உங்கள் பிள்ளைகளும் ஞானத்தில் வளர அனுப்பி வையுங்கள்.

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு




ஒவ்வொரு மாதமும் இரண்டாவது சனிக்கிழமை நடைபெறும் முழு இரவு திருவிழிப்பு செபம், வருகின்ற **ஆகஸ்ட் மாதம்** பொதுவிடுமுறை தினத்தின் காரணமாக **நடைபெறாது** எனபதை அறியத் தருகிறோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்



**சனிக்கிழமைகளில் இரவு** 8:30 மணிக்குத் தமிழில் இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்வியநற்கருணை ஆசீரும் நடைபெறும். நம் அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெறவும், திவ்விய நற்கருணையில் இறைப்பிரசன்னம் காணவும் அனைவரும் வருக!

## பொது விடுமுறைத் திருப்பலி நேரம்




**09-08-2019 வெள்ளி - சிங்கப்பூரின் தேசிய நாள்**
**12-08-2019 திங்கள் - ஹரி ராயா ஹஜ்ஜி**




காலை 10 மணிக்குத் தமிழ் திருப்பலி
(மதியம் 12மணி முதல் நம் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்.)
அன்று நம் பங்கு அலுவலகத்திற்கு விடுமுறை

| ஞாயிறு வாசகங்கள் | | |
|---|---|---|
|  | **முதல் வாசகம்:** | தொடக்க நூல் 18:20-32 |
| | **பதிலுரைப்பாடல்:** | திருப்பாடல் 15: 2. 3-4. 5 |
| | **பதிலுரை:** | ஆண்டவரே, நான் மன்றாடிய நாளில் எனக்குச் செவிசாய்த்தீர். |
| | **இரண்டாம் வாசகம்:** | கொலோசையர் 2:12-14 |
| | **வாழ்த்தொலி:** | அல்லேலூயா, அல்லேலூயா! பிள்ளைகளுக்கு உரிய மனப்பான்மையையே பெற்றுக் கொண்டீர்கள். அதனால் நாம், "அப்பா, தந்தையே" என அழைக்கிறோம். அல்லேலூயா. |
| | **நற்செய்தி வாசகம்:** | லூக்கா 11:1-13 |

| ஆலயத் திருப்பலி நேரங்கள் | | |
|---|---|---|
|  | வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| | சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| | ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| | ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| | பொது விடுமுறை: | காலை 9:00 மணி (ஆ),10:00 மணி (த) |

| ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள் | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 7:00 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | தூய லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:30 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ, அல்லது உங்கள் இல்லத்திலோ, உங்களுக்காக செபிப்பதாகக் கூறிக் கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு. நன்றி.

